டி.கே.எஸ்.சகோதரர்களின் நாடகம்

# உயிரோவியம்



"ஜீவா" எழுதியது



# "உயிரோவியம்"

ஆசிரியர் : திரு. நாரண–துரைக்கண்ணன்.

## கதைச் சுருக்கம்.

இது பெண்ணுரிமை பிரமாதமாகப் பேசப்படும் காலம் ஆனாலும், பெண்கள் ஆண்களோடு சரி நிகர் சமானமாக வாழக் கூடிய நிலை இன்னும் ஏற்படாததோடு மட்டுமல்லாமல் தங்கள் மனத்துக்குகந்த மணாளனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூட உரிமையில்லாது பலவிதமான கஷ்ட நஷ்டங்களையடைந்து வருகின்றனர். ஜீவாதாரமான இவ்வுரிமையின்மையால், எத்தனையோ மகளிர் தாங்கள் விரும்பிய காதலர்களை மணக்கமுடியாமல் மனம் நொந்து தற்கொலை செய்து கொள்கின்றனர். சிலர் பெற்றோர் உற்றாரைத் துறந்து காதலித்த ஆடவர்களுடன் ஓடிவிடுகின்றனர். மற்றும் சில பெண்கள் பிறந்த குடியின் பெருமைக்குத் தங்களால் களங்கமேற்படக் கூடாதெனக் கருதிப் பெற்றோர் பார்த்துக் கட்டிய கணவன்மாருடன் காலமெல்லாம் மனவேதனையுடன் காலங் கழிக்கின்றனர். இத்தகைய தியாகவுணர்ச்சியுடன் வாழ்க்கை நடத்தும் பெண்மணிகள் மிகச் சிலரே. இத்தகைய பெண்களின் தியாகஉணர்ச்சிக்கு மதிப்புக்கொடுத்து தாங்களும் இன்ப வாழ்க்கையைத் துறக்கும் ஆண்களைப் பார்ப்பது அபூர்வம். அந்த அபூர்வமான நிகழ்ச்சியொன்றை மிக உன்னதமுறையில் சித்தரிப்பதுதான் 'உயிரோவியம்' நாடகத்தின் தத்துவமாகும்.

கற்பகம் கல்லூரி மாணவி. அவள் படிக்க எடுத்துக்கொண்ட தமிழ் எம். ஏ., பரீட்சை பாடத்தை போதிப்பதற்காக நடராஜன் பிரத்தியேகமாக நியமிக்கப்படுகிறான். கற்பகத்தின் பேச்சைக் கேட்டுக்கொண்டு கல்லூரித் தலைவி மாலதி தேவி பத்திரிகையாளனாயிருக்கும் நடராஜனைத் தன் ஸ்தானத்தில் நியமித்துத் தன்னை அவமதித்து விட்டதாகக் கருதி, பண்டிதை மங்களம்மாள் ஆத்திரங் கொள்ளுகிறாள். எனவே, பாடம் போதிக்கப்படும் நேரங்களிற் போய் விஷமஞ் செய்கிறாள். இதனிடையே நடராஜனின் அழகும்

இளமையும் அவளை மயக்குகிறது. எனவே, அவள் நடராஜனைத் தன் வசப்படுத்த முயல்கிறாள். நல்லொழுக்கம் வாய்ந்த நடராஜன் அவள் விரித்த காம வலையில் சிக்காமல் தப்பித்துக் கொள்கிறான். கற்பகத்தின் மீது கொண்டுள்ள காதலால்தான் நடராஜன் தன்னை அலட்சியப் படுத்திவிட்டான் என்று மங்களம்மாள் கருதி, இருவரையும் பிரிக்கச் சூழ்ச்சி செய்கிறாள்.



தன் குடும்ப சிநேகிதரான சோமசுந்திர முதலியாருடைய தம்பி சந்திரசேகரனுக்குக் கற்பகத்தைக் கலியாணஞ் செய்து வைப்பதற்கு சபாரத்தின முதலியாரை மங்களம் சாகஸ மொழிகளால் இணங்கச் செய்து விடுகிறாள்.

முதல் சந்திப்பிலேயே கற்பகத்தின் சௌந்தரியம் நடராஜன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடுகிறது. பழக்கத்தில் கற்பகமும் நடராஜனிடத்தில் தன் மனதைப் பறி கொடுத்து விடுகிறாள். நாளடைவில் காதல் நேயம் ஏற்பட்டு விடுகிறது.




மங்களம் செய்த சதியால் திடீரெனக் கலியாண ஏற்பாடு நடப்பதையறிந்து, இருவரும் ஆறாத் துயரமடைகின்றனர். நடராஜன் வாழ்க்கைமீதே விரக்திகொண்டு அவள் இக்கலியாண ஏற்பாட்டைத் தடுக்க வழி கூறுமாறு கேட்டுக் கற்பகம் எழுதிய கடிதங்களைக்கூடக் கவனியாமல் இருந்து விடுகிறான்.

கற்பகம் எவ்வித முடிவுக்கும் வர முடியாமல் முதலில் வருந்து கிருள். அவள் தானே நேரில் தந்தையிடம் தன் காதலைத் தெரி விப்பது, அதற்கு அவர் சம்மதிக்காவிட்டால், நடராஜனுடன் ஓடிப்போய் எங்கேனும் வாழ்வது, அதுவும் சாத்தியமில்லையானல் விஷமருந்தியோ, நீரில் மூழ்கியோ தற்கொலை செய்து கொள்வது என்றெல்லாம் எண்ணுகிருள். ஆனல், முடிவில் இவள் நிதான மாகச் சிந்தித்து, தான் பிறந்த குடியின் பெருமையைக் காப் பாற்ற வேண்டித் தன் வாழ்க்கையைத் தந்தையின் விருப்பப்படி நடந்து தியாகஞ் செய்கிருள்.

ஆனலும் தன்னல் நடராஜன் அடைந்துள்ள உருக்குலைந்த நிலையைக் கண்டபோது கற்பகத்தின் உள்ளம் துடிதுடிக்கிறது. மண மண்டபத்தில் அவனைக் கண்டதும் மூர்ச்சை யாகிருள். நடராஜன் பதறிப்போய்த் தாங்கிக் கொள்கிருன். இதற்குப்பின் ஏற்பட்ட சந்திப்பில்தான் கற்பகம் இவனுக்குக் கடிதங்கள் எழுதிய விஷயம் தெரிகிறது. உடனே போய்க் கடிதங்களை எடுத்து படித்துப் பார்க்கிருன். கடிதங்களிலுள்ள வாசகங்கள் அவன் உள்ளத்தை உருக்கி விடுகின்றன.





சபாரத்தின முதலியார் மற்றத் தந்தையரைப் போல் குறுகிய மனோபாவ முடையவரல்லர். அவர் பெண்களுக்கு எல்லா விஷயங்களிலும் சரிசமத்துவமாக சுதந்திரம் அளிக்க வேண்டுமென்ற எண்ணமுடையவர்தாம். ஆனால் கலியாணத்தின் போது கற்பகத்தின் அபிப்பிராயத்தை கேளாதது மங்களத்தின் சூழ்ச்சியும் அவசர ஏற்பாடும் ஒருபுறமிருக்க, மாப்பிள்ளையின் அழகு, உயர்தரக்கல்வி, அந்தஸ்து, முதலியவை அவருக்கு மிகவும் பிடித்துப்போய் விட்டதுதான்; கற்பகத்திற்கும் இம் மாப்பிள்ளை பிடிக்கும் என்று அவர் நம்பிக்கை கொண்டார். இவ்வளவு தூரம் அவர் மாப்பிள்ளை வீட்டார் மீது வைத்திருந்த நல்லபிப்பி ராயத்தைத் தாலி கட்டுவது சம்பந்தமாக அவர்கள் எழுப்பிய தகராறு போக்கி விட்டது.

தாலி கட்டுவது கூட பெண்களை அடிமைப்படுத்தும் சின்ன மாகும் என்று கருதும் தீவிரமான சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையுடைய கூட்டத்தைச் சேர்ந்த மாப்பிள்ளை சந்திரசேக ரன், கற்பகம் நடராஜன்பால் காதல் கொண்டிருக்கிறாள் என்று அறிந்ததும், அவளுக்கு விவாக விடுதலையளிக்க முன் வருகிறான்.

மறு வீட்டு விருந்துக்குப் பின், நடராஜனும் கற்பகமும் மாளிகையின் பின்புறத் தோட்டத்தில் சந்தித்துப் பேசுவதையும், நடராஜன் கற்பகத்தை முத்தமிட்டுத் தழுவ விரும்புவதையும் கண்டு சந்திரசேகரன் ஆத்திரங் கொண்டாலும், பின்னர், தான் வேறொருவனுக்குக் கலியாணத்தால் உரியவளாகி விட்டபிறகு, தன்னை அவ்விதம் கேட்பது தகாது என்று அவள் புத்தி கூறுவதையும், நடராஜன் தவறு உணர்ந்து மன்னிப்புக் கேட்பதையும், இருவருடைய மாசு மறுவற்ற காதலையும் நல்லொழுக்கத்தையும் அறிந்து அவன் வியப்பும் மகிழ்ச்சியும் கொள்ளுகிறான்.

ஆகவே, இத்தகைய காதலர்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்தக் கூடாதென்ற பெருந்தன்மையுடன், சந்திரசேகரன் கற்பகத்துக்கு விவாக விடுதலையுரிமையை மனமுவந்து வழங்குகிறான். அவளை நடராஜனுடன் வாழ்க்கை நடத்துமாறு கூறுகிறான். கற்புக்கரசியான கற்பகம் இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்கவில்லை. தன் மானத்தையும், குடும்ப கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டுமென்று அவள் மன்றாடுகிறாள். "விவாக விடுதலையளித்தாலும் தற்போதைய சமுதாய அமைப்பில், காதலன் நடராஜனுடன் நான் வாழ்க்கை நடத்துவதென்பது நன்றாயிராது; சமுதாய ஒழுங்குக்காகவே எங்கள் வாழ்க்கையைத் தியாகஞ் செய்துவிட்டோம்." என்று கற்பகம் தெரிவிக்கிறாள். **இதற்குச் சந்திரசேகரன் என்ன சொல்லுகிறான்? கற்பகத்தின் நிலை என்ன?**

கதை முடிவு என்ன ஆகிறது என்பதை மேடையில் கண்டு களியுங்கள்.



# "UYIROVIYUM"

This is the era in which the rights of women are talked of highly. But still women besides failing to enjoy an equal status with men also have many woes and sufferings in not having their rights in selecting their husbands out of their own free will and choice. Due to this denial of their brith-right they commit suicide. Some run away with their partners chosen by love, deserting their parents. Few others viewing that they should not bring disrepute to their family of birth, spend all their life suffering mentally with their husbands chosen and got married to them by their parents. Such gems in women who sacrifice and live in life are a very few only. It is rare to find men respecting such feelings of sacrifice by women and themselves forsaking their own marital life. One such rare acts being depicted in a very high method and manner, is the essential theme of this **"UYIROVIYAM"**

* * *

Karpakam is a colloge student. Natarajan was specially fixed to tutor her in her studies for M. A. Course in Tamil. Pandit Mangalam got prejudice and makes mischief during the time of teaching. Natarajan's youth and charm also enchants her. So she attempts to make him yield to her carnal desires. Natarajan neglects her and runs away. Mangalam feels that due to his love towards Karpagam only she has been neglected and so she plans to seperate them. As Mangalam thinks Natarajan loves Karpagam and she also loves him. But still both of them did not express their love to each other.

Sabharatna Mudaliar is a good father. And also he is a social reformer. He gave respect to the demands of women to establish their equal rights in all matters. But he is convinced about the worth of Mangalam's choice, and also he is entirely satisfied with the bridegroom's status, higher studies and charm. So he did not ascertain the wishes of Karpagam. He sincerely believed, that Karpagam also may like this bride-groom and cannot have any objection to him.

Natarajan could not bear this disappointment. Due to his frustrated love, he loses his zest in life and did not care to see even the letters sent by Karpagam.

Karpagam could not express her dislike to the marriage arrangements made by her father. So she began to think in many ways how to tell straight to her father about her love affair, and what will happen in case he fails to consent to her view. Then she wants to run away with Natarajan. If that is not also possible to end her life by suicide.

At last she decides to sacrifice of her ownlife to protect her family name by accepting the decision of her father.

Karpagam's heart flutters when she sees Natarajan's pale face and she swoons in the Marriage Hall. Natarajan gets her on his shoulder. When they meet he knows that she has written letters to him. He goes to his house and takes the letters and reads them, After reading the letters. Natarajan knows the real situation and Karpagam's true love for him.

Natarajan and Karpagam meet in the garden in the night following the Marriage day. When they talk, Chandrasekaran hides behind a big tree and hears the words spoken by them. First he got angry, when Natarajan desired to kiss and embrace Karpagam. Then he gets astonished and glad to hear

Karpagams advice to Natarajan because she has wedded another one, it is not fair to ask her to kiss and embrace.

At the end Chandrasekaran realises the pure love between them and he offers himself freely the right of divorce to Karpagam, because in his heart of hearts he feels that it is not proper to spoil the life of these true lovers. He advises her to lead her life with Natarajan. Karpagam does not agree to this arrangement.

What happen?



**See the rest on the stage.**


"உயிரோவியம்" (நாடகம்)

பாடல்கள், உரையாடல்கள், படங்களுடன்

மூவர்ண முகப்பு அட்டையிட்ட

அழகிய பதிப்பு

விலை ரூ 2-0-0

"ஜீவா" வின் அற்புத சிருஷ்டி

# "உயிரோவியம்"

பாடல்கள்: திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி

✲



நடராஜன்

(1) (தொகையரு)

உயிர் ஓவியமே!......
என் ஜீவியமே!...
உயர் காவியமே!

பாட்டு.

உயிரோவியமே!
காதல் பேறே!
உயர் காவியமே!
கரும்பின் சாறே! (உ)

கலையெழில் காட்டும்
தேவியே!
கற்பகமே! சஞ்சீவியே!
உலகினிலே என் ஆவியே!
உவமையில் லாதவள்
நீயே!... ஆ!– (உ)

எண்ணமெல்லாம் வீண் போனதே! என்
இன்பக் கனவும் மண் ஆனதே!—உளக்
கண்ணில் உன்னுருவம் தோணுதே! பின்
காணாது மனமும் நாணுதே!— ஆ! (உ)

உல்லாசமாய் வான் மீதிலே
உலாவி மகிழும் போதிலே
பொல்லாத சமூகச் சூதிலே
பொசுக்குண்டோம் வஞ்சத்தீயிலே! (உ)

## வீராசாமி

பல்லவி

(2) மனுசாவ தாரமின்னு தெரிஞ்சுக்கோ
ஏ பொம்புளே! புரிஞ்சுக்கோ (ம)

அநுபல்லவி

முனிசாமி புள்ளேயிலே மூத்த புள்ளே வீராசாமி (ம)

ஒருதினுசா இன்னிமேலே என்னே
எளிசா நினேக்காதே சொன்னேன் (ம)

மிஞ்சிப் பேசற பொம்ப ளேங்களே
கொஞ்சிக் கொஞ்சி அடக்கும் ஆம்பிளே (ம)

ராமாவதாரம், கிருஷ்ணுவதாரம்,
சிங்காவதாரம், கல்காவதாரம்,
எல்லா அவதாரத்தையும்
ஏட்டிலே எளுதி வச்ச (ம)

## கற்பகம்

(3) "திங்களேப் போற்றுதும்; திங்களேப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்(று)இவ்
அங்கண் உலகுஅளித்த லான்."
"ஞாயிறு போற்றுதும்; ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம்திரித லான்;"
"மாமழை போற்றுதும்; மாமழை போற்றுதும்
நாமநீர் வேலியுலகிற்(கு) அவன் அளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்."

—"சிலப்பதிகாரம்"

## நடராஜன்

பல்லவி

(4) சிலப்பதிகாரப் பேரிலக்கியப் பெருமை
செப்புவ தென்பது யாருக்கும் அருமை (சி)

அநுபல்லவி

நிலப்பரப்பில் எங்கும் யாரும் காணாதது
நெறிமுறை அகத்துறை நிகழ்த்திடும் தமிழ்நூல் (சி)

சரணம்

முத்தமிழ் வேந்தர்கள் வீரமும் திறமும்
மோனத்தில் இருக்கும் தவத் துறவும்
பத்தினிப் பெண்களின் பண்புசேர் அறமும்
பாரினில் உயர்ந்தோர் கடமையும் புகலும் (சி)

## நடராஜன்

(5) "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும் பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!
தாழிருங் கூந்தல் தையால் நின்னை"

—"சிலப்பதிகாரம்"

## கற்பகம்

(6) காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்றன்
கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா—நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா
கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா—நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா—நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா.

—"மகாகவி பாரதியார்"

## கற்பகம்

(7) காதலெல்லாம் கொள்ளை கொண்டாய்—கண்ணா, கண்ணா!
கடைக்கண் பார்த்தருளாயோ—கண்ணா, கண்ணா!
வேதமெனக் குன்னிசையாம்—கண்ணா, கண்ணா!
வேணுகானம் செய்வாய் என்முன்—கண்ணா, கண்ணா!
பொங்கும் கடல் என் ஆர்வம்—கண்ணா, கண்ணா!
பூரண மதியுன் முகம்—கண்ணா, கண்ணா!
பங்கயம் நின் அன்புமலர் கண்ணா, கண்ணா!
பருதியுன் புன்னகையாம்—கண்ணா, கண்ணா!

—"சுத்தானந்த பாரதியார்"

## கற்பகம்



(8) பல்லவி

என்மனம் போல
இலக்கியப் பயிற்சி
இன்பமுடன் பெறுவேன்
இனிநான் (எ)

அநுபல்லவி

அன்பும் குணமும்
அறிவும் நிறைந்த—நல்
ஆசிரியர் தன்பால்
நேசமுடன் தினம் (எ)

சரணம்

பெண்ணுருக் கொண்ட பேய்களின் கூட்டம்
பேச்சினில் நஞ்சைப் பாய்ச்சி ஆர்ப்பாட்டம்
பண்ணிடும் வஞ்சப் பாவையர் நாட்டம்
பலியாது பகையிங்கு பரமானந்தம் ஊட்டும் (எ)

## கற்பகம்

பல்லவி

(9) காதல் வாழ்விலே கண்டார் பேரின்பம்
காவியப் பாதையிலே பழந்தமிழர் (கா)

அநுபல்லவி

சாதல் வந்தாலும் சலியா தெதிர்த்தே
சமர் செய்தேனும் ஜெயமே பெறும்மெய்க் (கா)

சரணம்

ஆன்றோர் அறத்தொடு அமைந்தநற் காதல்
அழிந்ததன் றே(டு)அருந் தமிழர்கள் வாழ்வில்
சான்று இன்னுள் பெண் சம்மதமின்றியே
தார்புனே வார்தாய் தந்தையர் இன்றே (கா)

## வீராசாமி

(10) லவ்வு……கன்னியம்மா மேலே லவ்வு……
ஐயோ……லவ்வு……
காலேஜூப் பொண்ணுங்கள்ளாம்
கதை கதையாப் பேசருப்பலே (ல)

காதல் கீதலின்னு சொல்லுருங்க—சும்மா
கண்ணேக் கிண்ணேக் காட்டிக் கொள்ளுருங்க-
பாதையெல்லாம் பழமை பேசுருங்க—அதைப்
பாக்கப் பாக்க எனக்கும் மனசு பதைக்குது
அதனுலே தாங்க (ல்)

அவங்க மாதிரி அந்நிய மில்லிங்க—நாங்க
அத்தை மவ மச்சான் முறைதாங்க
அவளைப் பிரிஞ்சு தனியா எப்படீங்க—
ஆசையை அடக்கிக்கின்னு பேசாமே இருப்பேனுங்க (ல)

இவ்வளவு தானுங்களா இன்னமும் கேளுங்க—
சோத்தைக் கண்டாப் புடிக்கலீங்க தூக்கமும் இல்லீங்க
சோர்ந்து சோர்ந்து மனசு சும்மா துடி துடிக்குதுங்க
நேத்து ராத்திரி நித்திரையிலே நேராவே வந்தாங்க
நெருங்கிப்போனேன் திடீரென்று
மறைஞ்சு போயிட்டாங்க
உடம்பு நெருப்பாயிருக்குங்க—அவளே
சுருக்காப் பாக்கணுங்க
இனி பொறுக்காதுங்க உசிர் இருக்காதுங்க
ஆமாங்க—நிசந்தாங்க
கன்னியம்மாகூட என்னை ஒன்னைச்
சேத்துடுங்க நீங்க (ல)

## கன்னியம்மா

(11) ஆசைதான்.........பேராசைதான்
ஆகாத காரியத்திலே ஏம் மெனக்கெடறே ஒனக்கு (ஆ)

ரோசம் வெக்கம் மானமும் இல்லையே—
ஏ ஆம்பிளே—நடு
ரோட்டிலே நின்னு காட்டுறே பல்லையே—கொற
வேசம் போட்டுப் படுத்துறே தொல்லையே—சும்மா
வெட்டித்தனமாக் கொட்டுறே சொல்லையே (ஆ)

மூஞ்சி மொகறக் கட்டையும் ஒரு
மொளத்துக்கு மேலே இருக்குது......
மொச்சைக் கொட்டையைப் போல கண்ணு
முளிச்சு முளிச்சுப் பாக்குது........
காஞ்ச புளியம் பளத்தைப் போல
கையும் காலும் முறுக்குது........
கன்னம் ரெண்டும் ஒட்டி ஒலந்து
கருங் கொரங்காட்டம் இருக்குது
கழுத்தைப் பாரு கொக்குப் போல......
காதைப் பாரு மொறத்தைப் போலே . . . (ஆ)

மூக்கைப் பாரு முந்திரிப்பழம் போலே—தலை
முடியைப் பாரு சூப்பின பனங்கா போலே
நாக்கைப் பாரு சோத்து மரவைப் போலே
சப்பை நடையைப் பாரு குட்டிக் கழுதை போலே
வல்லவட்டைப் பாரு மகா மனுசன்
மவனைப் போலே—சொத்தைப்
பல்லழகைப் பாரு பெரிய மம்முட்டியைப் போலே
இந்த—ஒட்டைச் சிவிங்கிப் பொட்டி மவனுக்கு
கட்டழகி நான் வோணுமாம்
. சட்ட வட்டமா கொட்டு மொழக்கோடே
தாலி கட்டிக்கவும் வோணுமாம் (ஆ)

கற்பகம்

(தொகையரு)

(12) கலைந்த ஓவியமே!......காரிருள் மயமே!
கன்னி என் ஜீவியமே!......

(பாட்டு)

உண்மை உணர்ந்திடுவாரோ—என்
உள்ளநிலை தெரிவாரோ......
வன்மனங் கொண்டு என் தந்தை—காதல்
வாழ்வைச் சிதைத்திடு வாரோ......
வாழ்வினிலே எந்த நாளும்—மா
மதனும் ரதியும் போலும்—மனம்
ஆழ்ந்த பேரின்பம் காணும்—இனி
அன்புவழி எங்கே தோணும்......
காதல் உலகினிலே
கற்பனைப் பாதையிலே—நீ
ஆதவன்; நான் கமலம்—என்
ஆருயிர் நீ; உடல் நான்......

## (13) வீராசாமி—கன்னியம்மா



வீராசாமி:

ஆசை வளருதே ஒம்மேலே—மனசை
அடக்க முடியலே என்னாலே
பாசமில்லாதவளைப் போல—சும்மா
பசப்புறியே நீஎம் முன்னாலே -

என்ன பார்க்கிறே!
நாந்தான் கேக்கிறேன்?
சும்மா ஏய்க்கிறே!
பொழுதைப் போக்கிறே!

கன்னி: ஆசை அதிகமானதாலே—சுத்த
அறிவு கெட்ட மனுசன்போலே—சும்மா
பேசுறியே நீ எம்முன்னாலே—ஒம்மேலே
பிரியமில்லாதவளா சரியாய்ப் புரியாமலே


வீரா: உசிரை உட்டுடுவேன் முன்னாலே—அப்பாலே
ஒனக்குத்தான் கசுட்டம் பின்னாலே
நெசமாத்தான் சொல்லுறேன் ஒன்னாலே
இந்த நிமிசமே பாரு ஒங்கண்ணாலே
நோகுதே! உடம்பு வேகுதே!
காலம் போகுதே! வருத்தம் ஆகுதே! (ஆ)

கன்னி: சேதி தெரியாததினாலே—சும்மா
சீண்டுறே நீ இனிமேலே—பொண்ணு
பூதியா கெடக்கறுப் போல—விஷயம்
புரிஞ்சுக்கலே என்னை அறிஞ்சுக்கலே (ஆ)

— —



எதிர்பாருங்கள்!




ரங்கம் பிரதர்ஸ், மதராஸ்